1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வரி விதிப்பில் பாரபட்சம் காட்டுவது பொருத்தமுடையதல்ல. உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கலந்து பேசி எதிர்காலத்தில் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திருவாரூரில் இரயில்வே மேம்பாலம்.

*395—வின.—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூரில் கட்டப்பட்டுவரும் இரயில்வே மேம்பால வேலை தாமதமாக நடைபெறுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும், (ஆ) : திருவாரூரில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகள் எவ்விதக்கால தாமதமும் இன்றி பல கட்டங்களில் வேகமாக நடந்து வருகின்றன. இரயில்வே பகுதியில் அமைக்கவேண்டிய மேம்பாலப்பகுதிக்கு இரயில்வேத் துறையினரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மேம்பாலம் அமைக்கும் பணி இன்னும் முடிவுறாமல், இதுவரை 'அப்ரோச் ரோடு' தான் போடப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன ; இன்னும் வேலை முடியவில்லை. மேலும் தாமதமாகாமல், துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அணுகுசாலை அமைக்கும் திட்டத்தை மாநில அரசு ஏற்றிருப்பதால் அந்தப் பணி விரைவில் முடியும் தருவாயில் இருக்கிறது. ஆனால் மேம்பாலத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் ஒப்புதலோடு நிறைவேற்ற வேண்டியிருப்பதால், மத்திய அரசின் ஒப்புதலைக் கேட்டிருக்கிறோம் ; விரைவில் ஒப்புதல் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம். ஒப்புதல் வந்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.